॥ श्री गुरुभ्यो नमः ॥

காலடி

ஸ்ரீமத் சங்கர ஜயந்தீ மஹோத்ஸவ

நிர்வாஹ ஸமிதியின்

ஸ்ரீமுக வருஷத்திய

விருத்தாந்தப் பத்திரிகை



श्रीकालटीधरणिभूषणभूतजन्मन्
जन्मादिदुःखविनिवारणबद्धदीक्ष ।
कारुण्यपूर्णनयनावनिदेवभाग्य
श्रीशङ्करार्य मम देहि पदावलम्बम् ॥

காலடி

அத்வைத ஸபா

---

1. வித்யா விசாரத ப்ரஹ்மஸ்ரீ குனிகல் ராம சாஸ்திரிகள், மைஸூர் ஸம்ஸ்தானம் தர்மாதிகாரி—அத்யக்ஷர்.

2. மீமாம்ஸாரத்ன மீமாம்ஸாகண்டீரவ ப்ரஹ்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள், பங்களூர் ஸ்ரீசங்கர மடம் மீமாம்ஸா அத்யாபகர்.

3. ப்ரஹ்மஸ்ரீ வேங்கடேச சாஸ்திரிகள், பங்களூர் ஸ்ரீ சங்கர மடம் வேதாந்த அத்யாபகர்.

4. ப்ரஹ்மஸ்ரீ வேங்கடாசல சாஸ்திரிகள், காலடி வேதாந்த பாடசாலை அத்யாபகர்.

5. ப்ரஹ்மஸ்ரீ ஏ. ஸாம்பமூர்த்தி ஐயர், பி. ஏ., பி. எல்., ரிடையர்டு ஜட்ஜ், காலடி—கார்யதர்சி.

உ

ஸ்ரீ குருசரணாரவிந்தாப்யாம் நம:

காலடி ஸ்ரீமத் ஆசார்ய ஜயந்தி மஹோத்ஸவ நிர்வாஹ ஸமிதியின் ஸ்ரீமுக வருஷத்திய விருத்தாந்தப் பத்திரிகை

1. உத்ஸவம்.

ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யவர்யர்களுடைய ஜன்ம ஸ்தலமான இந்த புண்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஜகத்குரு மஹாஸன்னிதானத்தின் ஆஜ்ஞையை அநுஸரித்து இவ்வருஷமும் வழக்கம்போல் ஸ்ரீ சங்கரஜயந்தீ மஹோத்ஸவம் அதிவிமர்சையாய் நடத்தப்பட்டது. காலடி அத்வைத ஸபா அத்யக்ஷரும் மைஸூர் ஸம்ஸ்தானம் தர்மாதிகாரியுமான வித்யா விசாரதர் ப்ரஹ்மஸ்ரீ குனிகல் ராமசாஸ்திரிகளவர்கள் சிரமத்தைப் பாராட்டாமல் பங்களூரிலிருந்து வந்திருந்து உத்ஸவம் பூராவையும் வெகு அழகாக நடத்தி வைத்தார்கள். உத்ஸவாரம்பதினமான வைசாக சுக்லப்ரதமை (25-4-33) செவ்வாய்க்கிழமைமுதல் ஜயந்தீ தினமான பஞ்சமீ (29-4-33) சனிக்கிழமை வரை பிரதிதினமும் ஸ்ரீமத் ஆசார்யமூர்த்திக்கு மஹந்ந்யாஸபுரஸ்ஸரமாய் ஏகாதசருத்ர பாராயணம் முதலியவைகளுடன் அபிஷேகாதிகளும், விசேஷ அலங்கார ஆராதனைகளும், ப்ராஹ்மணஸந்தர்ப்பணமும் வழக்கம்போல் நடந்தன.

பாராயண விவரம் :—

(1) ப்ரஹ்மஸூத்ரபாஷ்யம்: மைஸூர் ஆரடிக்குப்பம் ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகளும், திருப்பணத்துரை ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகளும்,

(2) சாந்தோக்யோபநிஷத்பாஷ்யம்: மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ நாராயணசாஸ்திரிகள்,

(3) ப்ருஹதாரண்யகோபநிஷத்பாஷ்யம்: மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ சிவஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகளும், மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ சங்கரநாராயணசாஸ்திரிகளும்,

(4) ஈசாத்யுபநிஷத்பாஷ்யம்: நொச்சூர் ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள்,

(5) ஸ்ரீமத்பகவத்கீதாபாஷ்யம்: திருப்பணத்துறை ப்ரஹ்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள்,

(6) ஸ்ரீமத்சங்கரவிஜயம்: சித்தூர் ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள்,

(7) ஸ்ரீமத்ஸூதஸம்ஹிதை: அரவங்குளம் ப்ரஹ்மஸ்ரீ விச்வநாதசாஸ்திரிகள்.

இவ்விதமாக வித்வான்கள் நியதமாக பாராயணம் செய்துவந்த துடன் பாராயண கைங்கர்யத்தில் ஸௌகர்யப்பட்டவர்கள் சேர்ந்து கொள்ளலாமென்று ஸபா அத்யக்ஷர் ப்ரஹ்மஸ்ரீ குனிகல் ராம சாஸ் திரிகளவர்கள் சொல்லியதை யநுஸரித்து சிருங்கேரி ப்ரஹ்மஸ்ரீ ஸுந்தரசாஸ்திரிகள், மல்லிக்கரை ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள், மதுரை ப்ரஹ்மஸ்ரீ ஸீதாராம சாஸ்திரிகள், பங்களூர் ப்ரஹ்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள், சிதம்பரம் ப்ரஹ்மஸ்ரீ ராகவ சாஸ்திரிகள், மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ ஸூர்யநாராயண சாஸ்திரிகள், திருப்பணத்துறை ப்ரஹ்மஸ்ரீ சங்கரநாராயண சாஸ்திரிகள், பொள் ளாச்சி ப்ரஹ்மஸ்ரீ ராமகிருஷ்ண சாஸ்திரிகள், பத்தமடை ப்ரஹ்மஸ்ரீ ஸீதாராம சாஸ்திரிகள், அத்தாழநல்லூர் ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சிரௌதிகள், இவர்கள் மேலேகண்ட கிரந்தங்களில் யதாஸௌகர்யம் பாராயணம் செய்து வந்தார்கள். இவ்விதமாக எல்லா பண்டிதர் களும் ஸ்ரீமத் ஆசார்ய ஆலயத்தில் ஐந்து தினங்களிலும் பாராயண கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தது வெகு ரமணீயமாக விருந்தது.

2. வேதாந்த பாடசாலை

காலடி வேதாந்த பாடசாலை வித்யார்த்திகளின் வித்யாபிவிருத் தியைத் தெரிந்துகொள்ள வருஷமத்தியில் "தினகரி"யிலும் "அத்வைதஸித்தி"யிலும் செய்த பரீக்ஷையில் அவ்வளவு திருப்தி கரமாயிருக்கவில்லை யானாலும் வருஷாந்தபரீக்ஷையில் கூடிய மட்டும் திருப்திகரமாகவே உத்தரம் கொடுத்தார்கள். அத்வைதஸித்தியில்

21-4

ஒரு பரீக்ஷாபத்திரமும் பிரஹ்மானந்தீயத்தில் இரண்டு பத்திரங்களும் பங்களூர் ஸ்ரீசங்கர மடம் வேதாந்தாத்யாபகர் ப்ரஹ்மஸ்ரீ மாத்தூர் வேங்கடேச சாஸ்திரிகள் தயாரித்துக் கொடுத்தார்கள். வாசிகபரீக்ஷையை அவர்களும், ஸ்ரீசங்கர மடம் மீமாம்ஸாத்யாபகரான மீமாம்ஸாரத்ன மீமாம்ஸாகண்டீரவ ப்ரஹ்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகளும், சிருங்கேரி மல்லிக்கரை ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகளும், மைஸூர் ஆரடிக்குப்பம் ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரமண்ய சாஸ்திரிகளும், காலடி ப்ரஹ்மஸ்ரீ வேங்கடாசல சாஸ்திரிகளும், கூட விருந்து நடத்தினர்கள். பரீக்ஷையில் யோக்யதாம்சம் மொத்தம் 450 என்று வைத்துப் பார்த்ததில்,

ப்ரஹ்மஸ்ரீ	அனந்த நாராயண சர்மா	253
,,	சங்கர சர்மா	248
,,	ராமஸ்வாமி சர்மா	240
,,	ஸுப்ராஹ்மண்ய சாஸ்திரி	163

என்று ஏற்பட்டதில் முதல் மூவரும் இரண்டாவது வகுப்பில் தேறினதாகவும் நான்காவது வித்யார்த்தி தேறவில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டது. பொதுவாகவே எல்லா வித்யார்த்திகளும் இன்னமும் அதிக வ்யாஸங்கம் செய்யவேண்டு மென்று பரீக்ஷகர்கள் அபிப்ராயப்பட்டார்கள். ப்ரஹ்மஸ்ரீ சேஷ சர்மா என்ற வித்யார்த்தி கொஞ்ச நாளாக சரீர அஸௌகர்யத்தினல் தன் ஊருக்குப் போயிருந்தபடியால் பரீக்ஷிக்கப்படவில்லை.

3. வேத பாடசாலை

(1) வேத பரீக்ஷை:

வேத பாடசாலை வித்யார்த்திகளுக்கு அதுவரை அத்யயனமாகியிருந்த பாகங்களிலும், சிலருக்கு மாத்திரம் அத்யயனமாகியிருந்த பதக்கிரமத்திலும், முன் வருஷங்களில் நடந்திருந்த பழைய பாடங்களிலும், சித்தூர் ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள், திருவையாறு ப்ரஹ்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள், முதலியவர்கள் முக்கியமாயிருந்து பரீக்ஷை செய்ததில் மொத்தம் 36 கேள்விகளுக்கு 360 மார்க்கு வைத்துப் பார்த்ததில்,

1.	சிரஞ்ஜீவி	S. கிருஷ்ணன்	342
2.	,,	V. ராமன்	323

3.	,,	V. வேங்கடராமன்	307
4.	,,	S. ராமநாதன்	228
5.	,,	A. வைத்யநாதன்	223
6.	,,	சங்கர நாராயணன்	190
7.	,,	அனந்த நாராயணன்	173
8.	,,	ராம கிருஷ்ணன்	171
9.	,,	சங்கர ஸுப்ரஹ்மண்யன்	144

ஆக மார்க்கு வாங்கினுர்கள். முதல் மூன்று பேர்களுக்குப் பாரிதோஷிகம் கொடுக்கப்பட்டது.

(2) காவ்ய பரீக்ஷை:

சிசுபாலவதம், தசகுமார சரித்திரம் இவைகளில் நடந்திருந்த பாகங்களில் மதுரை காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் ப்ரஹ்மஸ்ரீ K. V. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகளைக் கொண்டு பரீக்ஷா பத்திரங்கள் தயாரித்துக் கொடுத்து வித்யார்த்திகளின் உத்தரங்களைச் சரி பார்த்ததில் மொத்தம் மார்க்கு 200க்கு,

1.	சிரஞ்ஜீவி	S. கிருஷ்ணன்	183
2.	,,	சங்கர ஸுப்ரஹ்மண்யன்	162
3.	,,	அனந்த நாராயணன்	155
4.	,,	V. ராமன்	154
5.	,,	ராம கிருஷ்ணன்	147
6.	,,	சங்கர நாராயணன்	112
7.	,,	A. வைத்யநாதன்	92

ஆக மார்க்கு வாங்கினுர்கள். மற்றவிரண்டு வித்யார்த்திகள் இப்பரீக்ஷையில் சேரவில்லை. வழக்கமாய் முதல் மூன்று பையன்களுக்கு மாத்திரம் பாரிதோஷிகம் கொடுப்பதாயிருந்தபோதிலும், முதல் நான்கு பையன்களுமே நூற்றுக்கு எழுபத்தைந்துக்கு மேல் மார்க்கு வாங்கியிருந்ததுடன் மூன்றுவது பையனுக்கும் நான்காவது பையனுக்கும் ஒரே மார்க்கு வித்யாஸமிருந்தபடியால் அவனுக்கும் பாரிதோஷிகம் கொடுப்பதாக நிர்வாஹ ஸமிதியார் தீர்மானித்துக் கொடுத்தார்கள். தவிரவும், காவ்ய பாடம் வாசிக்கும்

ஒவ்வொரு வித்யார்த்திக்கும் அடுத்த வருஷம் பாடத்திற்கு உபயோகப்படக்கூடிய வியாக்யாஸஹிதமான போஜசம்பு, மேக ஸந்தேசம், சந்திராலோகம் என்ற மூன்று புஸ்தகங்களும் கொடுக்கப் பட்டன.

4. பக்தர்களின் உதவி

வித்யார்த்திகளின் பாரிதோஷிகத்திற்கு உபயோகித்துக் கொள் ளும்படி திண்டுக்கல் ப்ரஹ்மஸ்ரீ A. ஸுந்தரமையரவர்கள் ரூ. 18-ம், கோபிசெட்டிப் பாளையம் பெரிய அண்ணுக் குட்டி ஐய ரென்ற ப்ரஹ்மஸ்ரீ P. R. ஸ்ரீநிவாஸ ஐயரவர்கள் ரூ. 10-ம், கொல்லம் டிஸ்டிரிக்ட் பாரெஸ்ட் ஆபீஸர் ப்ரஹ்மஸ்ரீ S. ராமஸ்ஸுப்ரஹ்மண்ய ஐயரவர்கள் ரூ. 5-ம், வழக்கம் போல் கொடுத்து உதவினுர்கள். காலடி அத்வைத ஸபா அங்கத்தினராக இருந்து ஆதிமுதல் அபி மானித்து வந்த வித்யாநிதி மஹாவித்வான் மஹாமஹோபாத்யாய ப்ரஹ்மஸ்ரீ விரூபாக்ஷ சாஸ்திரிகளவர்கள் இப்பால் துரீயாச்ரமம் பெற்றுக் கூடலி சிருங்கேரி மடத்தில் அபிநவ வித்யா வாஸுதேச்வர பாரதீஸ்வாமிகள் என்ற யோகபட்டத்துடன் ஆசார்ய ஸ்தானம் வஹித்து வருகிறுர்கள். அப்பெரியார் ஜயந்தீ மஹோத்ஸவச் செல வுக்கு உபயோகிக்கும்படி ரூ. 15 கொடுத்தனுப்பி அநுக்ரஹித்தார் கள். முன்போல வீரவநல்லூர் ப்ரஹ்மஸ்ரீ M. R. ஸுப்பராவ் அவர்கள் ரூ. 50 கொடுத்தார்கள். திருச்சூர் ரெயில்வே கன்ஸ்ட்ரக் ஷன் ஹெட் அக்கவுண்டெண்ட் ப்ரஹ்மஸ்ரீ S. வேங்கிடக்ருஷ்ண ஐயரவர்கள் வித்யார்த்தி ஸம்பாவனைக்காக ரூ. 10-ம், கோயமுத்தூர் அட்வொகேட் ஸ்ரீமான் B. வேங்கடாசல முதலியாரவர்கள் உத்ஸவச்செலவுக்காக ரூ. 5-ம் இரண்டு சந்தனக் கல்களும் கொடுத் தார்கள். மதுரை ப்ரஹ்மஸ்ரீ M. வேங்கடேசுவர சாஸ்திரிகள் இவ் வருஷமும் ஒரு விலையுயர்ந்த ஜரிகைப்பட்டு கொண்டுவந்து ஜயந்தீ தினத்தில் ஸ்ரீமத் ஆசார்ய மூர்த்திக்குச் சாற்றினுர்கள். உத்ஸவ காலத்தில் வந்திருந்த பக்தர்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்களைக் கவனிப்பதிலும் மற்றும் பலவிதமாயும் உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்துவதிலும் வேத பாடசாலை வேதாந்த பாடசாலை வித்யார்த்தி கள் அத்யுத்ஸாஹத்துடன் கைங்கர்யத்தில் ஈடுபட்டார்கள். மேலே கண்டவர்களெல்லோருக்குமே எங்கள் கிருதஜ்ஞதையை இதன் மூலம் தெரியப்படுத்திக்கொள்கிறேம்.

5. அத்வைத ஸபா நியமனம்

மேலேகண்டபடி ப்ரஹ்மஸ்ரீ விருபாக்ஷ சாஸ்திரிகளவர்கள் துரீயாச்ரமஸ்வீகாரம் செய்துகொண்டுவிட்டபடியால் அவர்கள் இனி அத்வைத ஸபா நிர்வாஹத்தை வஹிக்க முடியாமலிருக்கும் ஸ்திதியில் அத்வைத ஸபையில் அவர்கள் ஸ்தானத்தில் பங்களூர் ஸ்ரீசங்கர மடம் அத்வைத வேதாந்த அத்யாபகர் ப்ரஹ்மஸ்ரீ மாத்தூர் வேங்கடேச சாஸ்திரிகளவர்களை ஸ்ரீமஹாஸன்னிதானம் நியமித்திருக்கிறார்களென்ற ஸமாசாரத்தை ஸந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

6. வாக்யார்த்தங்கள்

இவ்வருஷம் பண்டித ஸமாஜம் வெகு அழகாகச் சேர்ந்திருந்த படியால் தர்க்கம், வியாகரணம், பூர்வமீமாம்ஸை உத்தர மீமாம்ஸை ஆகிய நான்கு சாஸ்திரங்களிலும் வாக்யார்த்தம் நடைபெற்றது.

(1) முதல் தினம் (25-4-33): தர்க்கத்தில் ஹேத்வாபாஸ லக்ஷணம்—மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ சங்கர நாராயண சாஸ்திரிகள் பூர்வபக்ஷம், சிருங்கேரி மல்லிக்கரை ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் ஸித்தாந்தம்,

(2) இரண்டாவது தினம் (26-4-33): 1. வியாகரணத்தில் "இகோ அசி விபக்தௌ" என்ற ஸூத்ரம்—சிதம்பரம் ப்ரஹ்மஸ்ரீ ராகவ சாஸ்திரிகள் பூர்வபக்ஷம், கல்லிடைக்குறிச்சி ப்ரஹ்மஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் ஸித்தாந்தம்,

2. தர்க்கத்தில் பிரதிஜ்ஞாலக்ஷணநிர்வசனம்—திருவனந்தபுரம் ப்ரஹ்மஸ்ரீ நீலகண்ட சாஸ்திரிகள்.

(3) மூன்றாவது தினம் (27-4-33): 1. பூர்வ மீமாம்ஸையில் அச்வப்பிரதிக்ரஹேஷ்டியதிகரணம்—மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ சிவஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் பூர்வபக்ஷம், மைஸூர் ஆரடிக்குப்பம் ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் ஸித்தாந்தம்,

2. உத்தர மீமாம்ஸையில் "ஜ்யோதிஸ்சரணாபிதானாத்" என்ற ஸூத்ராதிகரணம்—பத்தமடை ப்ரஹ்மஸ்ரீ ஸீதாராம சாஸ்திரிகள் பூர்வ பக்ஷம், அத்தாழநல்லூர் ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சிரௌதிகள் ஸித்தாந்தம்,

(4) நான்காவது நாள் (28-4-33): "தத்வமஸி" வாக்யார்த்த விசாரம்—மைஸூர் ப்ரஹ்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் பூர்வ பக்ஷம், பங்களூர் ப்ரஹ்மஸ்ரீ வேங்கடேச சாஸ்திரிகள் ஸித்தாந்தம்.

இவ்விதமாக வாக்யார்த்தங்கள் வெகு விமர்சையாக நடை பெற்றன.

7. உபன்யாஸங்கள்

இவ்வருஷம் வித்வான்கள் அநேகம் பேர்கள் வந்திருந்தபடி யால் அதிகம் பேர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டு மென்று ஸதஸ்யர்கள் அபிப்பிராயப்பட்டதற் கிணங்கி முன்வருஷங்களை விட அதிக உபன்யாஸங்கள் நடந்தன.

(1) முதல் நாள் (25-4-33): திருநெல்வேலி ஸ்ரீ சிருங்கேரிமடம் ப்ரசாரகர் ப்ரஹ்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள்—சிவோத்கர்ஷம்: "கிருதயுகத்தில் ப்ரஹ்மாவையும், த்ரேதாயுகத்தில் ஆதித்யனையும், த்வாபரத்தில் விஷ்ணுவையும், கலியில் மஹாதேவனையும், விசேஷ மாய் ஆராதிக்கவேண்டிய நியாயத்தை யநுஸரித்தும், மாயிகமான ப்ரபஞ்ச உபஸம்ஹாரமே மோக்ஷரூபமா யிருப்பதால் அவ்வித நிலையை அடைய உபஸம்ஹார மூர்த்தியான பரமேசுவரனுடைய ஆராதனமே உசிதமாகும் என்ற நியாயத்தை யநுஸரித்தும் அவ் வாராதனமே மோக்ஷத்திற்கு முக்கிய ஸாதனமாகும். காடுகளில் இலைகளும், நதிகளில் ஜலமும், சரீரத்தில் கைகால்களும், இருக்க அப்பகவானை ஆராதிக்காம லிருக்க ஒருவித நியாயமுமில்லை. ஈசுவரன் ஸர்வவியாபியாயிருந்தாலும்கூட, எப்படி மாட்டின் சரீரத்தில் வ்யாபித்திருக்கும் க்ஷீரம் மடிவழியாக வெளியில்வந்து, தயிராகி, வெண்ணெயாகி, நெய்யாகி, மருந்துக்கு உபயோகப்படுகிறதோ, அது போல பகவானும் நம்முடைய ஆராதனபலத்தினல் ஒரு பிம்பத்தில் ஸான்னியத்யமடைந்தே நம்மை அநுக்ரஹிக்க வேண்டியிருக் கிறது. அவ்வாராதனம் மோக்ஷஸாதனம் என்பது மாத்திரமல்ல, பரலோக ஸுகத்திற்கு ஸாதனம் என்பது மாத்திரமுமல்ல, இங்கே பசு புத்திர தனதி ஸுகத்திற்கும் ஸாதனமாயிருக்கிறது" இத்யாதி விஷயங்களை ஸ்ரீமத் ஆசார்யர்கள் அய்யர்வாள், அப்பய்ய தீக்ஷிதர், நீலகண்ட தீக்ஷிதர் முதலான பெரியோர்களின் வாக்யங்களையும், பல சுருதி, ஸ்மிருதி, புராணவாக்கியங்களையும், உதாஹரித்து அதி விசதமாக உபன்யாஸம் செய்தார்கள்.

(1) இரண்டாவது தினம் (26-4-33): 1. திருவையாறு ப்ரஹ்மஸ்ரீ B. விசுவனாத சாஸ்திரிகள்—ஜீவப்ரஹ்மைக்யம்: "அத்வைத சாஸ்திரத்தின் அஸாதாரண லக்ஷணமே இந்த ஜீவ - ப்ரஹ்ம - ஐக்யம். இதரசாஸ்திரங்களி லெல்லாம் ஜீவனும் ப்ரஹ்மமும் வேறு என்றே வ்யவஹாரம். நான் என்று சொல்லப்படுகிற ஜீவன் ராகத்வேஷாதிகளால் பீடிக்கப்பட்டிருக்கிறபடியால் நிரஞ்ஜனனுயிருக்கிற ப்ரஹ்மத்துடன் ஐக்யம் எப்படி ஸித்திக்கும் என்று கேட்கலாம். நான் என்கிறவனுக்கு ராகத்வேஷாதிகளால் பீடிக்கப்படுவதே ஸ்வபாவமாயிருந்தால் ஸுஷுப்தியிலும் பீடிக்கப்பட வேண்டும். அப்படி இல்லாததனுல் அவைகள் ஜீவஸ்வரூபத்தில் சேர்ந்தவையல்ல வென்று நிச்சயிக்கலாம். இவ்விதமாக அந்தக்கரணதர்மங்களை யெல்லாம் விலக்கிப் பார்க்கும்போது ஜீவனும் ப்ரஹ்மமும் ஸ்வரூபத்தில் ஒன்றே என்பது நன்கு விளங்கும். காடகத்தில் நசிகேதஸ் உபாக்யானத்தில் ஜீவவிஷயமாய்க் கேட்ட ப்ரச்னத்திற்கு தர்மராஜன் ப்ரஹ்மவிஷயமாய் பதில் சொன்னதிலிருந்தும், பிருஹதாரண்யகத்தில் உனக்கு ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கிறே னென்று ஆரம்பித்த அஜாதசத்ரு தூங்கின வேலைக்காரனை எழுப்பிக் காட்டினதிலிருந்தும், யாஜ்ஞ்யவல்க்யமைத்ரேயீ ஸம்வாதத்திலிருந்தும், ப்ரஹ்மமீமாம்ஸைக்கு சாரீரகமீமாம்ஸை என்ற பிரஸித்தி யிருப்பதிலிருந்தும், இவ்வைக்யமே ஸித்திக்கிறது. கர்மா, பக்தி, யோகம் இவைகள் பேதத்தை அநுவதித்தே ப்ரவ்ருத்தித்தபோதிலும் பேதம் வாஸ்தவமென்று சொல்ல வரவில்லை. அந்தக்கரணத்தில் இவ்வாஸனை நிவிருத்தியாகும்வரை அபேதஞானம் ஏற்படாது. ஆனுல் பேதப்ரமம் இருப்பதை வைத்து ஜீவனும் ப்ரஹ்மமும் வேறு ஆகிவிடாது. கயிற்றில் ஸர்ப்பப்ரமம் வந்ததற்காகக் கயிற்றிலிருந்து விஷமேறுது. சிரவண, மனன, நிதித்யாஸனங்களால் அந்தக்கரணத்தை ஸ்வச்சமாக்கி இவ்வைக்யஞானத்தையடையும் விஷயத்தில் தனக்குமேல் பதார்த்தமே யில்லாமல், தானே ப்ரஹ்மமாய் விளங்குகிறபடியால் அவனே ஸ்வராட் என்று சொல்ல வேண்டும். ப்ரஹ்மாதி ஸகல தேவதைகளும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களே. ஆகையால் சாஸ்திரங்களில் சொல்லிய ப்ரகாரம் படிப்படியாய் இவ்வாத்மஞானத்தை யடைய ப்ரயத்னம் செய்ய வேண்டும்'' என்ற விஷயத்தைத் பல லௌகிக வைதிக திருஷ்டாந்தங்களுடன் தெளிவாய் எடுத்துச் சொன்னுர்கள்.

2. மதுரை ப்ரஹ்மஸ்ரீ M. N. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்.—ஸ்ரீமத் ஆசார்ய அவதார ப்ரயோஜனம்: "ஈசுவராபசாரம் செய்தாலும் ஆசார்யர் மூலமாக மன்னிப்பு வாங்கி விடலாம். ஆசார்யருக்கு துரோஹம் செய்தால் ஈசுவரனும் கைவிட்டு விடுவார். ஆகையால் பரமத நிராகரணம், அத்வைதமத ஸ்தாபனம், பாஷ்யாதி ரசனை முதலிய பெரிய உபகாரங்களை நமக்குச் செய்திருக்கிற ஸ்ரீசங்கர பகவத்பாதாசார்யர் விஷயத்தில் நாம் எப்பொழுதும் கிருதஜ்ஞதை யைக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்விஷயத்தில் நாம் கொஞ்சம் உதாஸீனமாயிருந்து வந்ததனுல்தான் நம் தேசத்திற்குப் பலவித கெடுதல்கள் ஏற்படுகின்றன வென்பதைக் கவனித்து சிருங்கேரி ஸ்ரீமஹா ஸன்னிதானம் செய்த ஆஜ்ஞையை யநுஸரித்து ப்ரஹ்ம வித்யா பத்திராதிபராய் ப்ரஸித்தராயிருந்த ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் ஸ்ரீசங்கர பகவத் பாதாசார்யருடைய ஜன்ம பூமியான இவ்விடத்தைக் கண்டுபிடித்துத் தன் ஆனந்தத்தை "ஜகத்குருதாமஸேவா சதகம்" என்ற கிரந்த வாயிலாக வெளியிட்ட துடன், பிரதி வருஷம் இங்கு அநேகம் பண்டிதர்களைத் தருவித்து ஜயந்தீ உத்ஸவத்தை நடத்திவந்தார்கள். இந்த ஸ்தலத்தில் ஸ்ரீமத் ஆசார்யர் அவதரித்து, ஸ்வர்ணமலகவர்ஷம் முதலிய பாலலீலைகளை காட்டி, எட்டாவது வயதில் ஸன்யாஸம் பெற்று, உத்தரதேசம் சென்று, அமாநுஷமான பல கிருத்யங்களைச் செய்து, வைதிக மதத்தை உத்தாரணம் செய்து ஸம்ரக்ஷித்து, சாசுவதமாய் மதபரி பாலனம் நடக்கும்படி மடங்களையும் ஏற்படுத்திக் கொடுத்து, ப்ரஸ்தானத்ரய பாஷ்யாதிகளையும் ரசனை செய்து, பலவிதத்தில் நம்மை அநுக்ரஹித்திருக்கிற ஸ்ரீமத் ஆசார்யருடைய அநுக்ரஹத் திற்குப் பாத்திரர்களாகும்படி நாம் எல்லோரும் அவரவரால் முடிந்த மட்டில் பக்தி செலுத்தி கிருதஜ்ஞதையைக் காட்டவேண் டும்" என்று குருபக்தி நிறைந்த ஓர் உபன்யாஸம் செய்தார்கள்.

(3) மூன்ருவது தினம் (27-4-33) 1. பங்களூர் மீமாம்ஸா ரத்ன மீமாம்ஸாகண்டீரவ ப்ரஹ்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள்—மனுஷ்ய ஜன்ம மஹிமை: "மனுஷ்ய ஜன்மம் பலத்தினுலாவது அழகினுலாவது இதர ப்ராணி ஜன்மங்களைவிட உயர்ந்ததல்ல. நல்லது எது, கெட்டது எது என்று தெரிந்துக் கொள்ளக்கூடிய விவேகமும் அவ்விதம் தெரிந்து கொண்டபடி அநுஷ்டிக்க ஸ்வா தந்த்ர்யமும் பெற்றிருப்பதினுலேயே மனுஷ்யன் உயர்ந்தவன்.

எல்லாருக்கும் ஸுகத்தில் விருப்பமிருந்தும்கூட ஸுகமடைகிற தில்லையென்பதையும், ஸுக ஸாதனமாக நாம் நினைத்திருக்கிற தனம் முதலியன இருந்தும் துக்கமடைகிறோமென்பதையும் நாம் அநுபவத்தில் பார்ப்பதால், திருஷ்ட காரணங்களைத் தவிர அதிருஷ்ட காரணம் வேறு இருக்கவேண்டுமென்று நாம் தெரிந்து கொள்ளலாம். ஸுகத்திற்கு அதிருஷ்ட காரணமாயிருப்பதைப் புண்ணியமென்றும், தர்மம் என்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. துக்கத்திற்கு அதிருஷ்ட காரணமாயிருப்பதைப் பாபமென்றும், அதர்மம் என்றும் சொல்லுகிறார்கள். தர்மத்தை யநுஷ்டிக்காமல் தர்ம பலனாகிய ஸுகம் மாத்திரம் கிடைக்கவேண்டுமென்று நினைப்பது தவறு. தர்மம் இன்னதென்று நம் புத்தியினால் கண்டு பிடித்து விடலாமென்று நினைப்பதும் தவறு. ஆகையால் சாஸ்திர விஹித கர்மாக்களை யதாவத்தாக அநுஷ்டிக்க வேண்டும். அதற்கு பூரு ஸௌகர்யமில்லாமல் போனாலும் சாஸ்திர நிஷித்தமான கார்யங்களைக் கண்டிப்பாய் விலக்கவேண்டும். இவ்விதம் கர்மாவினால் சித்த சுத்தியை ஸம்பாதித்துப் பிறகு ஞானமார்க்கத்தில் இறங்கி மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடையக்கூடிய ஸௌகர்யம் மனுஷ்ய ஜன்மத்திலேயே இருப்பதால் அதை நன்கு உபயோகப்படுத்தி கிருதார்த்தர்களாக ப்ரயத்னம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம்" என்று விஸ்தாரமாய் உபன்யஸித்தார்கள்.

2. மதுரை ப்ரஹ்மஸ்ரீ V. ஸீதாராம சாஸ்திரிகள்—புருஷார்த்த நிரூபணம்: "ஸாதாரணமாய் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று புருஷார்த்தங்கள் நான்கு என்று வியவஹரிக்கப்பட்ட போதிலும் தர்மமும் அர்த்தமும் ஸாதனங்களாயிருப்பதனாலும், காமம் அல்பஸுகமாயிருப்பதனாலும், முக்கிய புருஷார்த்தம் மோக்ஷமேயாகும். அம்மோக்ஷத்திற்கு கர்ம, உபாஸனம், ஞானம் என்ற மூன்று ஸாதனங்கள் உண்டு. அவைகளில் கர்மா பாபத்தைப் போக்கடித்து சித்தசுத்தியை உண்டாக்குவதால் பஹிரங்க ஸாதனமாகும். சித்தைகாக்ர்யம் உண்டுபண்ணும் உபாஸனம் அந்தரங்க ஸாதனமாகும். ஞானம் ஒன்றுதான் ஸாக்ஷாத் மோக்ஷஸாதனமாகும். உபாஸனம் புருஷ தந்த்ரமாயிருப்பதாலும், பலத்தில் லோகாந்தர கமனாதிகளும் அங்கேயும் ஸுகதாரதம்யமும் ஏற்படுவதாலும், ~~அங்கே~~ அதை ஞானத்துடன் சேர்ப்பது நியாயமில்லை. ஞானம் வஸ்துதந்த்ரமாயிருப்பதால் தாரதம்யமன்னியில் ஏகரூபமா

யிருக்கும். தவிரவும், கர்மா, உபாஸனம் இவ்விரண்டும் அதிருஷ்ட ப்ரயோஜனத்தை யுண்டுபண்ணுகின்றன. ஞானமோ திருஷ்ட ப்ரயோஜன முள்ளது. ஆகையினாலே இவ்விடத்திலேயே ஜீவன் முக்திநிலையை அடையலாமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. இவ்விதமாக ஸகல சாஸ்திர விஹிதமான மார்க்கங்களும் பரம புருஷார்த்தமான மோக்ஷத்திலேயே கொண்டு விடுகின்றன'' என்று பல ப்ரமாணவாக்யங்களுடன் உபன்யாஸம் செய்தார்கள்.

(4) நான்காவது நாள் (28-4-33): 1 மதுரை ப்ரஹ்மஸ்ரீ K. V. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்—ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர வர்கள் சரித்திரம்: ''ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யர் அவதாரம் செய்து கொஞ்சநாள் சென்ற பிறகு மறுபடியும் வைதிகமதம் சீர்குலைந்து கிடக்கும்போது ஸ்ரீகாஞ்சீ மண்டலத்தில் அடையப் பலம் என்ற கிராமத்தில் ரங்கராஜாத்வரி என்ற மஹானுக்குப் புத்திரராக பரமேசுவராம்சபூதராய் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் சுமார் 300 வருஷங்களுக்கு முன் அவதரித்து சிவோத்கர்ஷத்தையும் அத்வைத மதத்தையும் மறுபடியும் நிலைநாட்டினார். இவர் அதிபால்யத்திலேயே உத்தமாதிகாரி என்று தெரிந்து ஐந்தாவது வயதில் உபநயனம் செய்துவைத்தார்கள். ரத்னகேடதீக்ஷிதரின் புத்திரி மங்களாம்பாளை விவாஹம் செய்துகொண்டார். நெறிதவறாது நித்ய கர்மாக்களையும் ஸோமயாகாதிக்ரதுக்களையும் அநுஷ்டித்துக் கொண்டும் சாஸ்திரப்ரவசனாதிகளைச் செய்துகொண்டும் வந்தார். வாஜபேயத்தில் நரஸிம்ஹராஜன் குடை பிடித்தான். வேலூர் சின்ன பொம்மராஜன் இவருடைய தகப்பனார்காலத்திற்குப் பிறகு வைஷ்ணவ மதத்தில் பற்றுண்டாகியிருந்தும் இப்பால் இவரிடம் ஈடுபட்டு இவரைத் தன் ஆஸ்தானபண்டிதராக வைத்துக்கொண்டான். தீக்ஷிதர் ஸ்வர்ணாபிஷேகம் பெற்று அத்திரவியத்தைக் கொண்டு அடையப் பலத்தில் ஆலயப்ரதிஷ்டையும் க்ருஹாதி தானங்களும் செய்தார். தோட்டாச்சார்யார், தாத்தாசார்யார் முதலான வைஷ்ணவர்களை வாதத்தில் ஜயித்து ஸ்ரீகாஞ்சீ ஸர்வ புஷ்கரிணியில் விஜயஸ்தம்பம் நாட்டினார். பிறமதஸ்தர்களால் ஏற்பட்ட பலவித இடைஞ்சல்களையும் ஈசுவராநுக்ரஹத்தாலும் தபோபலத்தாலும் நிவிருத்திசெய்து கொண்டார். சிவார்க்கமணிதீபிகை, பரிமளம், குவலயாநந்தம் முதலிய 104 கிரந்தங்களை இயற்றி லோகாநுக்ரஹம் செய்தார். சிதம்பரத்தில் தன் தம்பி ஆச்சான் தீக்ஷிதருடைய

பௌத்திரரான நீலகண்ட தீக்ஷிதருக்கு விசேஷ அநுக்ரஹம் செய்துவிட்டு தன் யோகபலத்தால் தன் தேஜஸ்ஸை நடராஜரிடம் ஐக்யம் செய்து கொண்டார்'' என்றும் இன்னும் விஸ்தாரமாக அப்பய்ய தீக்ஷிதேந்திரவிஜய மென்று ஒரு சம்பூகிரந்தம் தான் எழுதியிருப்பதாகவும் சொன்னார்கள்.

2. பங்களூர் ப்ரஹ்மஸ்ரீ வேங்கடேச சாஸ்திரிகள்—ஆத்ம ஸ்வரூபம்: "ஆத்ம ஸ்வரூபத்தையறிவதே ஸுகஸாதனமாகும் என்று எல்லாரும் தெரிந்து கொண்டிருந்தும் ஆத்மா ஸூக்ஷ்மமா யிருப்பதால் ஸ்பஷ்டமாய்த் தெரிகிற ஸ்தூல சரீரமே ஆத்மா, இந்திரியங்கள் ஆத்மா, பிராணன் ஆத்மா, மனஸ் ஆத்மா முதலிய விதங்களாகப் பற்பல கொள்கைகள் ஏற்பட்டுவிட்டன. பாஹ்ய பதார்த்தங்களில் வைத்திருக்கும் ஆத்மத்வபுத்தியை விலக்கிச் சரீரத் தில் நிலைநிறுத்த உபயோகப்படுவதால் சரீராத்மவாதமும், அதே மாதிரி மற்ற வாதங்களும், நமக்கு பரம்பராஸாதனங்களேயாகும். தான் யார் என்று யாருக்கும் ஸந்தேஹமில்லை யென்பது வாஸ்தவமா யிருந்தாலும் தன் ஸ்வரூபம் எப்படிப்பட்டதென்று வியக்தமாய்த் தெரியவில்லை. புலித்தோல் போற்றின பசுப்போலவும், ஸ்திரீ வேஷம் பூண்ட புருஷன் போலவும், சரீராதிகளுடன் ஆத்மா கலந் திருப்பதினால் அதன் ஸ்வரூபம் தனித்துத் தெரியவில்லை. அதை அறிய அந்தக்கரணம் சுத்தமாயிருக்கவேண்டும். கண்வியாதியிருக்கிற வனுக்குப் பார்க்கப்படும் வஸ்துவின் ஸ்வபாவம் நன்கு தெரியாது. அதேமாதிரி கர்ம, உபாஸனை என்ற ஸாதனங்களை அநுஷ்டித்து அந்தக்கரணத்தைப் பரிசுத்தம் செய்துவிட்டால் ஆத்மஸ்வரூபம் தானே விளங்கும். தான் இருப்பதனாலும், தன்னை அறிய கருவி அவசியமில்லாததனாலும், மனஸ் ஒய்வு அடைந்து ஆத்மா தனித்து இருக்கும் காலத்தில் ஸுகமாயிருப்பதனாலும், ஆத்மா ஸத் சித் ஆனந்த ரூபன் என்பது விளங்கும். இதை அநுபவாரூடமாய்ச் செய்வதற்கு சாஸ்திரங்களில் சொல்லியபடி கர்ம, உபாஸனை, விசாரம் முதலிய ஸாதனங்களைக் கைக்கொள்வது அவசியம்'' என்று யாரும் அறியும்படி துரூஹமான விஷயங்களைத் தெளிவாய் உபன்ய ஸித்தார்கள்.

(5) ஐந்தாவது தினம் (29-4-33) சிருங்கேரி ப்ரஹ்மஸ்ரீ ஸுந்தர சாஸ்திரிகள்—ஸ்ரீமத் ஆசார்ய அவதாரம்: இன்று ஸ்ரீசங்கர ஜயந்தி தினமாயிருக்கிறபடியால் ஸ்ரீமத் ஆசார்யருடைய அவதார

வைபவத்தையும், அவர் செய்துள்ள அத்புதமான பலகார்யங்களையும், அவர் வைதிகமத ஸம்ரக்ஷணத்திற்காக செய்திருக்கும் பாஷ்யாதி கிரந்தரசனை முதலிய கிருத்யங்களையும், மற்றும் ஸ்ரீசங்கர விஜய காவ்யத்திலுள்ள அநேக விஷயங்களையும் எடுத்து விஸ்தாரமாய் உபன்யாஸம் செய்தார்கள்.

8. ஜயந்தீ தினம்

அன்று மேலேகண்டபடி ப்ரஹ்மஸ்ரீ ஸுந்தர சாஸ்திரிகள் ஸ்ரீமத் ஆசார்ய சரித்திரத்தை எடுத்துச் சொன்ன பிறகு, அத்வைத ஸபா அத்யக்ஷரான வித்யாவிசாரத ப்ரஹ்மஸ்ரீ குனிகல் ராம சாஸ்திரிகளவர்களின் ஆத்யக்ஷ்யத்தில் ஸபை மேல் நடந்தது. சென்ற வருஷத்திய விருத்தாந்தப் பத்திரிகை வாசிக்கப்பட்ட பிறகு, வித்வான்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் யதாக்கிரமமாய் ஸம்பாவனைகள் கொடுக்கப்பட்டன. மைஸூர் ஸம்ஸ்கிருத அத்யாபகர் ப்ரஹ்மஸ்ரீ ஹிரியண்ணு அவர்களால் தன் குருவாகிய கோபி செட்டிப்பாளையம் ப்ரஹ்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளின் ஞாபகார்த்தமாய் ஏற்படுத்திய மூலதனத்தின் விருத்தியம்சமான ரூ. 70 உள்ள ஸம்பாவனை இவ்வருஷம் ஸ்ரீமஹா ஸந்நிதானத்தின் ஆஜ்ஞாப்ரகாரம் சிருங்கேரி ஸ்ரீஸத்வித்யா ஸஞ்ஜீவினீ பாடசாலை அத்யாபகரான ப்ரஹ்மஸ்ரீ ஸுந்தர சாஸ்திரிகளுக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு ஸபாத்யக்ஷரவர்கள் "பரமாசார்யரவர்கள் அவதரித்து பிரபஞ்சத்திற்குச் செய்திருக்கும் மஹோபகாரத்தை யாராலும் மறக்கமுடியாது. நாம் வேறுவிதத்தில் நம் கிருதஜ்ஞதையைக் காட்ட அசக்தர்களாயிருப்பதால் அவர்கள் மூர்த்தியிலாவது ஈடுபட ஸௌகர்யமிருக்கும்பொருட்டு ஸ்ரீமஹாஸந்நிதானம் இந்த க்ஷேத்திரத்தைக் கண்டுபிடித்து மிகச்சிரமப்பட்டு வெகு அழகாக ஆலய நிர்மாணம் செய்து இம்மஹோத்ஸவத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் ஸங்கல்பத்தை யநுஸரித்து 22 வருஷங்களாக இவ்வுத்ஸவம் மேன்மேலும் விமர்சையாக நடந்து வருகிறது. கார்ய நிர்வாஹ ஸமிதியார் ஏற்பாடு செய்திருக்கும் யத்கிஞ்சித் ஸம்பாவனையை ஆசார்ய ப்ரஸாத ரூபமாகபாவிக்கவேண்டுமே தவிர வித்வான்கள் எடுத்துக் கொள்ளும் சிரமத்திற்கு இது கைம்மாறு ஆகாது. இனிமேலும் இப்படியே வித்வான்களும் மற்றும் பக்தர்களும் பிரதி வருஷமும் ஆசார்ய ஸேவையில் ஈடுபட்டு ஆசார்

யாநுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகவேண்டும்'' என்று சொல்லி ஸபையை உபஸம்ஹாரம் செய்தார்கள். பிறகு ஸ்ரீமத் ஆசார்ய மூர்த்திக்கு தீபாராதனை நடந்து ஸபை கலைந்தது.

9. புஸ்தக கோசம்

மைஸூர், திருவனந்தபுரம், பரோடா, ஸம்ஸ்தானங்களிலிருந்து புஸ்தகங்கள் அனுப்பிக் கொடுக்கும்படி அந்த அந்த மஹாராஜாக்கள் உத்திரவு செய்திருப்பது போல காச்மீர ஸம்ஸ்தானத்திலும் உத்திரவாகியிருக்கிறது. அந்த ஸம்ஸ்தானத்திலிருந்து வெளியிடப்பட்டிருக்கும் கிரந்தங்களில் அநேக சைவ தந்திர கிரந்தங்கள் உள்பட 44 அபூர்வமான புஸ்தகங்கள் வந்திருக்கின்றன. தர்க்க தாண்டவம் என்ற கிரந்தம் மைஸூர் ஸம்ஸ்தானத்திலிருந்தும், நியாய ஸாரம், ஆர்ய படீயம் முதலான 13 கிரந்தங்கள் திருவாங்கூர் ஸம்ஸ்தானத்திலிருந்தும், தந்திர ரத்னம், பேத ஸித்தி, காவ்ய ப்ரகாசம் முதலான 12 கிருந்தங்கள் அலஹாபாத் கவர்ன்மெண்டிலிருந்தும், இவ்வருஷம் கிடைத்தன. மதுரை ப்ரஹ்மஸ்ரீ K. V. ஸூப்ரமண்ய சாஸ்திரிகள் திருக்குறளின் ஸம்ஸ்கிருத தர்ஜமான ஸூநீதிகுஸூமமாலையையும் அதன் வியாக்யானத்தையும் கொடுத்தார்கள். சிருங்கேரி மடத்திலிருந்து ப்ரஹ்மஸ்ரீ நடுக்காவேரி ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் காலடி க்ஷேத்திரத்தைப் பற்றி இயற்றிய ஸ்ரீஜகத்குருதாமஸேவாசதகம் என்ற காவ்யத்தின் கிரந்த லிபிப்ரதி ஒன்றையும், சென்னை ப்ரஹ்மஸ்ரீ V. வேங்கடேசுவர சாஸ்திருலு அவர்கள் மஹாபாரதத்தில் ஸபாபர்வம், விராடபர்வம், உத்யோக பர்வம் இவைகளையும், ப்ரஹ்மஸ்ரீ N. K. வெங்கடேச பந்துலு அவர்கள் ஸ்ரீசங்கராசார்ய சரிதம் முதலிய மூன்று கிரந்தங்களையும், காசி ஸ்ரீப்ரஹ்மானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளவர்கள் ஸ்ரீசங்கராசார்ய ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம் இரண்டையும், சென்னை ப்ரஹ்மஸ்ரீ T. V. ஈசுவர சாஸ்திரிகள் ஸத்குரு நித்ய தர்சனம் என்ற கிரந்தத்தையும், திருநெல்வேலி ப்ரஹ்மஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஸ்ரீராமாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளியற்றிய ஹிந்து மத நோக்கம் என்ற கிரந்தத்தையும் அனுப்பினார்கள். டில்லியில் ஆடிடர் ஜெனரல் ஆபீஸ் ஸூப்ரிண்டெண்டாயிருக்கும் கங்கைகொண்டான் ப்ரஹ்மஸ்ரீ S. கணபதி சர்மா அவர்கள் ரூ. 10-ம், ~~பெரும்பாலூர் தாசில்தார் ப்ரஹ்மஸ்ரீ S. ராமஸ்வாமி ஐயர் ரூ. 10-ம்,~~

புஸ்தக கோசத்திற்கு உபயோகித்துக் கொள்ளும்படி அனுப்பினார்கள். இவ்விதமாக புஸ்தக கோசவிருத்திக்காக உதவின எல்லா ஸம்ஸ்தானங்களுக்கும் கனவான்களுக்கும் எங்கள் கிருதஜ்ஞதையை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். சில்லரையாக வேறு புஸ்தகங்களும் வாங்கப்பட்டன.

10. பிரார்த்தனை

மேன்மேலும் இப்புண்ய க்ஷேத்திரத்திற்கு நம் தேசத்திலுள்ள பக்தர் யாவரும் வந்து இங்குள்ள ஸ்தாபனங்களைப் போஷித்து மூர்த்திகளை தர்சித்துப் போவதுடன் இவ்வுத்ஸவத்தையும் விசேஷமாய் நடத்திக்கொடுத்து குருபக்தி மஹிமையால் தங்களை கிருதார்த்தர்களாக்கிக் கொள்ளவேண்டுமென்று ஸ்ரீமத்ஆசார்ய சரணாரவிந்தத்தில் பிரார்த்திக்கிறோம்.

அநுபந்தம் 1.
வித்வத் ஸம்பாவனை விவரம்

A : வித்வான்கள்—

					ரூ.
1.	சிருங்கேரி ப்ரஹ்மஸ்ரீ ஸுந்தர சாஸ்திரிகள் (ஹிரியண்ணு ஸம்பாவனை)			...	70
2.	பங்களூர்	,,	வைத்யநாத சாஸ்திரிகள்	...	25
3.	,,	,,	வேங்கடேச ,,	...	25
4.	காலடி	,,	வேங்கடாசல ,,	...	25
5.	மல்லிக்கரை	,,	ஸுப்ரஹ்மண்ய ,,	...	25
6.	திருவையாறு	,,	B. விசுவநாத ,,	...	25
7.	ஆரடிக்குப்பம்	,,	ஸுப்ரஹ்மண்ய ,,	...	25
8.	சிதம்பரம்	,,	ராகவ ,,	...	25

						ரூ.
9.	மைஸூர்	,,	நாராயண	,,	...	25
10.	,,	,,	சிவஸுப்ரஹ்மண்ய	,,	...	20
11.	,,	,,	ஸூர்யநாராயண	,,	...	20
12.	,,	,,	சங்கரநாராயண	,,	...	20
13.	திருநெல்வேலி	,,	விசுவநாத	,,	...	20
14.	கல்லிடைக்குறிச்சி	,,	சங்கர	,,	...	20
15.	பொள்ளாச்சி	,,	ராமகிருஷ்ண	,,	...	20
16.	மதுரை	,,	V. ஸீதாராம	,,	...	20
17.	,,	,,	K.V. ஸுப்ரஹ்மண்ய	,,	...	20
18.	,,	,,	M.N. ஸுப்ரஹ்மண்ய	,,	...	15
19.	சித்தூர்	,,	நரஸிம்ஹ கனபாடிகள்		...	15
20.	,,	,,	ராமஸ்வாமி சாஸ்திரிகள்.		...	15
21.	பத்தமடை	,,	ஸீதாராம	,,	..	15
22.	திருப்பணத்துறை	,,	சங்கரநாராயண	,,	...	10
23.	கல்லிடைக்குறிச்சி	,,	சங்கரராம	,,	...	10
24.	அத்தாழநல்லூர்	,,	ராமஸ்வாமி சிரௌதிகள்		...	10
25.	புதுக்கோடு	,,	சுவேதாரண்ய சாஸ்திரிகள்		...	10
26.	காலடி	,,	ஸீதாராம கனபாடிகள்		...	10
27.	,,	,,	P. S. கிருஷ்ண சாஸ்திரிகள்.			10
28.	ரவணஸமுத்திரம்	,,	ராமய்யா கனபாடிகள்		...	7
29.	புதுக்கோடு	,,	அப்புக்குட்டி சாஸ்திரிகள்		...	7
30.	திருப்பணத்துறை	,,	கிருஷ்ண	,,	...	7
31.	,,	,,	ஸுப்ரஹ்மண்ய	,,	...	7
32.	,,	,,	ஸ்ரீநிவாஸ	,,	...	5
33.	திருவனந்தபுரம்	,,	நீலகண்ட	,,	...	5
34.	பூங்குன்னம்	,,	கிருஷ்ண கனபாடிகள்		...	5
35.	,,	,,	ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்		...	4
36.	கூவேலிமடம்	,,	சிவராம கனபாடிகள்		...	4
37.	காலடி	,,	வைத்யநாத வாத்தியார்		...	4
38.	,,	,,	ஸங்கமேசுவர சாஸ்திரிகள்		...	4
					ஆக	609

B: பரீக்ஷகர்கள்.—

					ரூ.
1. பங்களூர்	ப்ரஹ்மஸ்ரீ	வைத்யநாத	சாஸ்திரிகள்	...	10
2. ,,	,,	வேங்கடேச	,,	...	10
3. சித்தூர்	,,	ராமஸ்வாமி	,,	...	5
4. மதுரை	,,	K. V. ஸுப்ரஹ்மண்ய	,,	...	5
				ஆ	30

C: வழிச்செலவுக்காக—

					ரூ.
1. பங்களூர்	ப்ரஹ்மஸ்ரீ	வைத்யநாத	சாஸ்திரிகள்	...	10
2. ,,	,,	வேங்கடேச	,,	...	10
3. திருவையாறு	,,	விசுவநாத	,,	...	10
4. மல்லிக்கரை	,,	ஸுப்ரஹ்மண்ய	,,	...	10
5. ஆரடிக்குப்பம்	,,	ஸுப்ரஹ்மண்ய	,,	...	10
6. சிதம்பரம்	,,	ராகவ	,,	...	10
7. மைஸூர்	,,	நாராயண	,,	...	10
8. திருநெல்வேலி	,,	விசுவநாத	,,	...	5
9. மதுரை	,,	K. V. ஸுப்ரஹ்மண்ய	,,	...	5
				ஆ	80

ஆக A. B. C. மொத்தம் ரூ. 719.

அநுபந்தம் 2.

வித்யார்த்தி ஸம்பாவனை விவரம்

A: வேதாந்த பாடசாலை.—

					ரூ.
1. ப்ரஹ்மஸ்ரீ	அனந்தநாராயண	சர்மா		...	10
2. ,,	சங்கர	,,		...	10
3. ,,	ராமஸ்வாமி	,,		...	10
				ஆ	30

B : வேத பாடசாலை—

					ரூ
வேதம்—	1.	சிரஞ்ஜீவி	S. கிருஷ்ணன்	...	10
	2.	,,	V. ராமன்	...	8
	3.	,,	V. வேங்கடராமன்	...	6
ஸாஹித்யம்	*1.	,,	S. கிருஷ்ணன்	...	7
	*2.	,,	K. சங்கரஸுப்ரஹ்மண்யன்	...	5
	*3.	,,	R. அனந்தநாராயணன்	...	3
	*5.	,,	V. ராமன்	...	3
				ஆ	42
மற்றவர்கள்	*1.	,,	S. ராமகிருஷ்ணன்.		
	*2.	,,	V. சங்கரநாராயணன்		
	*3.	,,	A. வைத்யநாதன்		
	*4.	,,	S. ராமநாதன்.		

* இந்த அடையாள மிட்ட பையன்களுக்கு மேகதூதம், போஜ சம்பு சந்திராலோகம் இவைகளில் ஒவ்வொரு ப்ரதி விசேஷமாகக் கொடுக்கப்பட்டது—ஆக 8 ப்ரதிகளின் விலை ... 22 1 0.

ஆக 64 1 0

C : சித்தூர் பாடசாலை வகையறா.—

				ரூ.
1.	சிரஞ்ஜீவி	கோபாலகிருஷ்ணன்	...	3
2.	,,	வேங்டேசுவரன்	...	3
3.	,,	மயூரநாதன்	...	3
4.	,,	N. ராமன்	...	3
5.	,,	வெ. ஸுப்ரஹ்மண்யன்	...	3

			ரூ.
6.	சிரஞ்ஜீவி ஸூர்யநாராணன்	...	3
7.	,, V. ஸுப்ரஹ்மண்யன்	...	3
8.	,, S. அனந்தகிருஷ்ணன்	...	3
9.	,, ராமகிருஷ்ணன்	...	3
10.	,, ரகுபதி (பூங்குன்னம்)	...	3
11.	,, ரகுநாதன் (கொடுங்களூர்)	...	3
12.	,, சங்கரநாராயணன் ,,	...	3
13.	,, வேங்கடேசுவரன் (காலடி)	...	3
		ஆக.	39

ஆக். A. B. C. மொத்தம் ரூ. 133 1 0

அநுபந்தம் 3.

வரவு செலவு விவரம்

A: வரவு.—

		ரூ.	அ.	பை.
1. ஸ்ரீமடத்திலிருந்து				
(1) உத்ஸவச் செலவுக்காக	...	1000	0	0
(2) ஸம்பாவனைக்காக	...	799	0	0
(3) பரீக்ஷகர் ஸம்பாவனைக்காக	...	30	0	0

2. உத்ஸவச் செலவுக்காக
(1) கூடலி சிருங்கேரிமடம் ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகள் ... ரூ. 15
(2) வீரவநல்லூர் ப்ரஹ்மஸ்ரீ M. R. ஸுப்பராவ் ... ரூ. 50
(3) கோயமுத்தூர் அட்வோகேட் ஸ்ரீமான் B. வேங்கடாசல முதலியார் ... ரூ. 5 } ஆக 70 0 0

3. வித்யார்த்தி ஸம்பாவனைக்காக
(1) திண்டுக்கல் ப்ரஹ்மஸ்ரீ A. ஸுந்தரமையர் ... ரூ. 18
(2) கோபிசெட்டிப்பாளையம் ப்ரஹ்ம ஸ்ரீ பெரிய அண்ணுக்குட்டி ஐயர் என்ற P. R. ஸ்ரீநிவாஸ ஐயர் ... ரூ. 10
(3) கொல்லம் டிஸ்ட்ரிக்ட் பாரெஸ்டு ஆபீஸர் ப்ரஹ்மஸ்ரீ S. ராம ஸுப்ரஹ்மண்ய ஐயர் ... ரூ. 5
(4) திருச்செந்தூர் ரயில்வே கன்ஸ்டிரக்ஷன் ஹெட் அகௌவுண்டெண்டு ப்ரஹ்மஸ்ரீ S. வேங்கட கிருஷ்ண ஐயர் ... ரூ. 10 — 43 0 0

4. சில்லரை பழையசாமான்கள் விற்று வரவு ... 20 7 10

ஆக	1962	7	10

B: செலவு.—

	ரூ.	அ.	ப.
(1) அபிஷேகமும் ஸந்தர்ப்பணையும் ...	827	5	7
(2) தீபம் ...	50	0	9
(3) பந்தல் செலவு ...	39	9	11
(4) இனும் ...	8	14	0
(5) வித்வத்ஸம்பாவனை (அநுபந்தம் 1).	719	0	0
(6) வித்யார்த்தி ,, ,, 2	133	1	0
(7) சில்லரைச் செலவுகள் (தபால், அச்சுக்கூலி உள்பட) ...	157	10	4
...	1935	9	7
கையிருப்பு ...	26	14	3
ஆக	1962	7	10

அநுபந்தம் 4.

உத்ஸவத்திற்கு வந்திருந்தவர்களில் முக்கியமான சிலர்

மைஸூர்:	ப்ரஹ்மஸ்ரீ	குனிகல் ராம சாஸ்திரிகள்
	,,	நாராயண சாஸ்திரிகள்
	,,	சிவஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
	,,	சங்கரநாராயண சாஸ்திரிகள்
	,,	ஆடிக்குப்பம் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
	,,	ஸூர்ய நாராயண சாஸ்திரிகள்
	,,	விசுவநாத ராவ்
சிருங்கேரி:	,,	மல்லிக்கரை ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
	,,	ஸுந்தர சாஸ்திரிகள்
	,,	கணபதி சர்மா
பங்களூர்:	,,	வைத்யநாத சாஸ்திரிகள்
	,,	வேங்கடேச சாஸ்திரிகள்
	,,	M. லக்ஷ்மீநாராயணப்பா
	,,	K. நாராயண சாஸ்திரிகள்
நஞ்சன்கூடு	,,	நஞ்சுண்டய்யா
	,,	ஸீதாராம சாஸ்திரிகள்
	,,	கிருஷ்ண சாஸ்திரிகள்
	,,	ஸ்வாமிநாத ஜோஷி
	,,	கிருஷ்ணப்பா
சென்னை	,,	S. M. B. ஈசுவர ஐயர்
கோயமுத்தூர்	ஸ்ரீமான்	B. வேங்கடாசல முதலியார்
	ப்ரஹ்மஸ்ரீ	C. S. G. வேங்கட ஸுப்ரஹ்மண்ய ஐயர்
	,,	S. ராமசந்திர ஐயர்
	,,	ஸுந்தரேச ஐயர்
	,,	கிருஷ்ணஸ்வாமி ஐயர்
	,,	வேங்கட ஸுப்ரஹ்மண்ய ஐயர்
	,,	வேங்கடராம ஐயர்

கனியூர்	,,	சந்திரமௌளீசுவர ஐயர்
	,,	கிருஷ்ணமூர்த்தி ஐயர்
கொழுஞ்சிவாடி	,,	ராமகிருஷ்ண ஐயர்
கரூர்	,,	ஸுப்ரஹ்மண்ய ஐயர்
பிக்ஷாண்டார் கோவில்	,,	நடேச ஐயர்
புதுக்கோட்டை	,,	பஞ்சாபகேச ஐயர்
திருவையாறு	,,	B. விசுவநாத சாஸ்திரிகள்
சிதம்பரம்	,,	V. ராகவ சாஸ்திரிகள்
மதுரை	,,	A. ஸாம்பமூர்த்தி ஐயர்
	,,	V. ஸீதாராம சாஸ்திரிகள்
	,,	K. V. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
	,,	M. N. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
	,,	M. N. முத்துகிருஷ்ண சாஸ்திரிகள்
	,,	S. லக்ஷ்மண ஐயர்
	,,	M. வேங்கடேசுவர சாஸ்திரிகள்
	,,	வேங்கடராம ஐயர்
திருநெல்வேலி	,,	R. கிருஷ்ணஸ்வாமி ஐயர்
	,,	K. S. ஸுந்தரம் ஐயர்
	,,	ஸுப்ரஹ்மண்ய ஐயர்
	,,	விசுவநாத சாஸ்திரிகள்
கல்லிடைக்குறிச்சி	,,	A. சங்கர சாஸ்திரிகள்
	,,	சங்கராராம சாஸ்திரிகள்
	,,	R. சங்கர ஐயர்
ரவணஸமுத்திரம்	,,	ராமய்யா கனபாடிகள்
பத்தமடை	,,	ஸீதாராம சாஸ்திரிகள்
	,,	P. K. அனந்தநாராயண ஐயர்
அத்தாழநல்லூர்	,,	ராமஸ்வாமி சிரௌதிகள்
திருவனந்தபுரம்	,,	ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
	,,	K. S. கரந்து
	,,	நீலகண்ட சாஸ்திரிகள்
கொட்டாரக்கரை	,,	P. S. ஸுப்ரஹ்மண்ய ஐயர்

தொட்டுவை	,,	வேங்கடாசல ஐயர்
ஆலப்புழை	,,	நொச்சூர் ராமஸ்வாமி சாஸ்திரிகள்
பரூர்	,,	ராமநாத ஐயர்
	,,	ஸுப்ரஹ்மண்ய ஐயர்
கூவேலிமடம்	,,	சிவராம கனபாடிகள்
	,,	ரத்ன கனபாடிகள்
அரூர்	,,	ஸுப்ரஹ்மண்ய ஐயர்
பெரும்பாவூர்	,,	சிந்தாமணி ராஜாமணி ஐயர்
	,,	ஹரிஹர ஐயர்
	,,	பரசுராம ஜோஸ்யர்
	,,	ஸுப்பராய ஜோஸ்யர்
கோட்டயம்	ஸ்ரீமான்	வைத்யலிங்கம் பிள்ளை, திவான் பேஷ்கார்
கொச்சி	ப்ரஹ்மஸ்ரீ	சேஷு ஐயர், ஸர்வாதிகாரி
	,,	அசுவத்தநாராயண ஐயர், ஸெக்ரிடரி
	,,	அனந்த கிருஷ்ண ஐயர்
	,,	N. பரமேசுவர ஐயர்
திருப்பணத்துறை	,,	சங்கர நாராயண சாஸ்திரிகள்
	,,	கிருஷ்ண சாஸ்திரிகள்
	,,	ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
	,,	ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள்
திருச்சூர்	,,	தெற்கே மடம் ஸ்ரீஸ்வாமிகளர்கள்
	,,	சுவேதாரண்ய சாஸ்திரிகள்
	,,	வேங்கடராம ஐயர்
	,,	S. V. வேங்கடராம ஐயர்
	,,	S. வேங்கட கிருஷ்ண ஐயர்
	,,	V. நடராஜ ஐயர்
	,,	விசுவநாத ஐயர்
	,,	பாலஸுந்தர ஐயர்
	,,	வேங்கடராம ஐயர்
சித்தூர்	,,	நரஸிம்ஹ கனபாடிகள்
	,,	ராமஸ்வாமி சாஸ்திரிகள்

ஒற்றப்பாலம்	,,	ராமகிருஷ்ண சாஸ்திரிகள்
	,,	கைலாஸ ஐயர்
	,,	சந்திரசேகர ஐயர்
பாலக்காடு	,,	வேங்கடேச ஐயர்
புதுக்கோடு	,,	அப்புக்குட்டி சாஸ்திரிகள்
தலைச்சேரி	,,	ஸீதாராம சாஸ்திரிகள்
காலடி	,,	K. P. மஹாதேவ ஐயர்
	,,	வேங்கடாசல சாஸ்திரிகள்
	,,	P. S. கிருஷ்ண சாஸ்திரிகள்
	,,	ஸீதாராம கனபாடிகள்
	,,	P. S. அனந்தநாராயண சர்மா
	,,	S. சங்கர சர்மா
	,,	N. N. ராமஸ்வாமி சாஸ்திரிகள்
	,,	H. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
	,,	வைத்யநாத வாத்யார்
	,,	ஸங்கமேச்வர சாஸ்திரிகள்
	,,	P. S. வேங்கடாசல ஐயர்
	,,	P. ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்
	,,	சங்கர ஐயர்
	,,	பத்மநாப ஐயர்
	,,	வேங்கடாசல ஐயர்
	,,	வீரராகவ ஐயர்
	,,	ஹரிஹர ஐயர்

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.

காலடி

ஸ்ரீமத் சங்கர ஜயந்தீ மஹோத்ஸவ நிர்வாஹ ஸமிதி

1. ப்ரஹ்மஸ்ரீ ஏ. ஸாம்பமூர்த்தி ஐயர், பி.ஏ., பி.எல்., ரிடையர்டு ஜட்ஜ், காலடி--அத்யக்ஷர்.

2. ப்ரஹ்மஸ்ரீ கே. ஸி. ராமசந்திர ஐயர், ரிடைர்டு எஞ்ஜினீயர், கும்பகோணம்.

3. ப்ரஹ்மஸ்ரீ கே. ஸி. காசி ஐயர், பாங்கர், கல்லிடைக் குறிச்சி.

4. ப்ரஹ்மஸ்ரீ எஸ். வி. வேங்கடராம ஐயர், பாங்கர், திருச்சூர்—பொக்கிஷதார்.

5. ப்ரஹ்மஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயர், எம். ஏ., பி. எல்., அட்வொகேட், திருநெல்வேலி—கார்யதர்சி.

॥ श्रीशंकरार्यपदावलम्बस्तवः ॥

आकर्ण्य दीनगृहिणीवचनं कृपार्द्रः
स्वर्णात्मकामलकसंततिमासमन्तात् ।
गेहस्य योऽतितरसा हि ववर्ष स त्वं
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

आनेष्ट दूरगनदीं जननीहिताय
यो बाल्य एव जगतां हितकृत्स्वभावः ।
स त्वं समस्तजनरक्षणबद्धदीक्ष
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

प्राणैर्विहीनतनयं तरसा समीप-
मानीय रोदनकरौ पितरौ समीक्ष्य ।
यः प्रातनोदसुयुतं तनयं हि स त्वं
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

भट्टादिभास्करसितेतरकण्ठमुख्यान्
वादे विजित्य कुतुकाद्विदुषां वरेण्यान् ।
अद्वैतमार्गपरिरक्षणजागरूक
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

सर्वान् स्वकीयमततत्त्वपरीक्षणेच्छूं-
स्तत्तन्मतार्थकथनेन विजित्य सोदम् ।
सर्वज्ञपीठमधिरुह्य य आप स त्वं
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

आस्तिक्यरत्नमिह पुण्यचयेन लभ्यं
कल्यम्बुधौ निपतितं तरसार्यपाद ।
उद्धृत्य तेन परिपालय लोकमेनं
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

THE M. L. J. PRESS, MYLAPORE.